# யா/யூனியன் கல்லூரி

# சைவநெறி

# 1. கடவுள்

1. கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்பதை எவ்வாறு அறியலாம்?
   - ௐ நாம் வாழும் இந்த உலகம் உயிருள்ளனவற்றையும் உயிரல்லாதனவற்றையும் கொண்டது. இந்த உலகத்தைப் படைத்து, காத்து, அழிக்கும் சக்தி ஒன்று உள்ளது. அந்த சக்தியே கடவுள் என உணரப்படுகின்றது. கட+உள்= கடவுள் ஆகும். அதாவது எல்லாப்பொருட்களையும் கடந்தும் அவற்றில் கலந்தும் இருப்பதிலிருந்து கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்பதை அறியக் கூடியதாக உள்ளது.

2. கடவுளின் தன்மைகள் சிலவற்றைக் கூறுக?
   - ௐ என்றும் உள்ளவர்
   - ௐ என்றும் நிறைந்தவர்
   - ௐ எல்லாம் அறிந்தவர்
   - ௐ எல்லாம் வல்லவர்
   - ௐ அளவில்லா ஆனந்தமுடையவர்

3. கடவுளின் உண்மைத் தன்மையைப் பற்றிக் கூறும் நூல்கள் எவை?
   - ௐ வேதங்கள்
   - ௐ உபநிடதங்கள்
   - ௐ ஆகமங்கள்

4. கடவுள் எங்கும் பரந்துள்ளார் என்பதை உத்தாலகர் எவ்வாறு விளக்கினார்?
   - ௐ நீரில் உப்புக்கல் கரைந்து பரந்திருப்பதைப் போல் கடவுளும் எங்கும் பரந்திருக்கின்றார் என்றும் உத்தாலகர் மகனுக்கு விளக்கினார்.

5. ஆலம் விதைக் கதையினூடாக எவ்வாறு உலகப் படைப்பு விளக்கப்படுகிறது?
   - ௐ கண்ணுக்குப்புலப்படாத மிகச் சிறிய ஆலம் விதையில் இருந்து பெரிய ஆலமரம் உண்டாகின்றது. அது போலவே கண்ணுக்குப்புலப்பாடாத கடவுளிலிருந்து இந்த உலகம் தோன்றியது என்பதை விளக்கிக் கூறினார்.

6. பஞ்ச கிருத்தியங்கள் எவை?
   - ௐ படைத்தல்
   - ௐ காத்தல்
   - ௐ அழித்தல்
   - ௐ அருளல்
   - ௐ மறைத்தல்

7. உத்தாலகரின் மகன் பெயர் யாது?
   - ௐ சுவேதகேது

8. கடவுளின் உண்மைத் தன்மையைக் கூறும் உபநிடதம் எது?
   - ௐ சாந்தோக்கிய உபநிடதம்

# 2. ஆலய வழிபாடு- I

(அ) ஆலய வழிபாடு

1. இறைவனை ஏன் ஆலயத்திற்குச் சென்று வழிபட வேண்டும்?
   - ௐ பசுவின் குருதியே பாலாகின்றது. குருதி பசுவின் உடல் முழுவதும் பரந்துள்ளது ஆயினும் அதன் மடியிலுருந்து மட்டுமே பால் பெறப்படுகின்றது, அது போன்று உலகெங்கும் பரந்திருக்கும் இறைவனின் அருள் கிடைக்கப் பெறும் இடமாக ஆலயமாக விளங்குவதால் இறைவனை ஆலயத்திற்கு சென்று வழிபட வேண்டும்.

2. தூலலிங்கம் எனப்படுவது எது?
   - ௐ ஆலயக்கோபுரம்

3. விநாயகரை எவ்வாறு வணங்குதல் வேண்டும்?
   - ௐ விநாயகரை வணங்கும்போது முஷ்டியாகப் பிடித்த கைகளால் சிரசில் மூன்று முறை குட்டிக் கும்பிடல் வேண்டும். பின்னர் இடக் கையால் வலக்காதையும், வலக்கையால் இடக்காதையும் மாற்றிப் பிடித்து மூன்று முறை தாழ்ந்தெழுந்து (தோப்புக்கரணம் போட்டு) வணங்குதல் வேண்டும்.

4. ஆண்கள் செய்யவேண்டிய நமஸ்காரம் யாது? அது செய்யப்படும் முறை யாது?
   - ௐ அட்டாங்க நமஸ்காரம்
   - ௐ தலை, கைகள், செவிகள், புயங்கள், மேவாய் என்னும் எட்டு அங்கங்கள் நிலத்தின் பொருந்தும்படி வணங்கவேண்டும்.

5. பெண்கள் செய்யவேண்டிய நமஸ்காரம் யாது? அது செய்யப்படும் முறை யாது?
   - ௐ பஞ்சாங்க நமஸ்காரம்
   - ௐ தலை, கைகள், முழங்கால்கள் என்னும் ஐந்து அங்கங்கள் பொருந்தும்படி வணங்குவது பஞ்சாங்க நமஸ்காரம் ஆகும்.

6. ஆலயத்தில் செய்யத்தகாத காரியங்கள் எவை?
   - ௐ ஆலயத்திற்குச் செல்லும் போது ஆசாரமில்லாமல் செல்லக்கூடாது
   - ௐ ஆலயச் சூழலில் எச்சில் உமிழ்தல், மலசலங்கழித்தல், தலைமுடி கோதுதல்,வெற்றிலை பாக்கு உண்ணுதல் கூடாது
   - ௐ ஆலயத்தினுள் வீண்வார்த்தை பேசுதல் ஆலயத்தின் விமானம், பலிபீடம், விக்கிரகங்களைத் தீண்டுதல், பலிபீடத்திற்குக் குறுக்கே செல்லுதல், ஓடி வலம் வருதல், திரைச்சீலை இடப்பட்டிருக்கும் போது நமஸ்கரித்தல் என்பன குற்றமுடைய செயல்களாகும்.

7. ஆலயம் என்பதன் பொருளை விளக்குக?
   - ௐ ஆ+லயம் எனப் பிரித்து நோக்கும் போது "ஆ" என்பது பசுவையும் "லயம்" என்பது ஒடுக்கத்தையும் குறிக்கின்றது. அதாவது ஆன்மாவானது (ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களையும் நீக்கி) இறைவனிடத்தில் ஒடுங்குவதற்கு உரிய இடமாக அமைவதே ஆலயம் ஆகும்.

8. ஆலய அமைப்பு மனித உடலின் அமைப்போடு எவ்வாறு பொருந்துகின்றது?
   - ௐ அதாவது ஒரு மனிதன் படுத்திருக்கும் தோற்றத்தில் ஆலயம் அமைகிறது. மூலஸ்தானம் (கருவறை) சிரசையும், அர்த்த மண்டபம் கழுத்தையும், மகா மண்டபம் மார்பையும், தரிசன மண்டபம் வயிற்றையும், அடுத்து அமையும் மண்டபங்கள் கால்களையும் இராஜகோபுரம் பாதங்களையும் குறிக்கின்றன,

(ஆ) ஆலயக் கிரிகைகள்

1. ஆலயத்தில் நிகழ்த்தப்படும் மூன்று வகைக் கிரியைகள் யாவை?
   - ௐ நித்திய கிரிகை
   - ௐ நைமித்திய கிரிகை
   - ௐ காமிய கிரிகை

2. நித்திய கிரியை எனப்படுவத யாது?
   ௐ ஆலயத்தில் தினந்தோறும் நடைபெறும் கிரியைகள் நித்திய கிரியைகள் எனப்படும்

3. பெரிய கோயில்களில் நித்திய கிரிகைகள் எத்தனை வேளைகள் நடைபெறுகின்றன? அவை எவை?
   6 கால வேளைகள்
   ௐ உஷத் காலம்
   ௐ காலைச்சந்தி
   ௐ உச்சிக்காலம்
   ௐ சாயரட்டை
   ௐ இரண்டாம் காலம்
   ௐ அர்த்த சாமம்

4. நைமித்திய கிரியைகள் என்றால் என்ன? இரண்டு உதாரணங்கள் தருக?
   ௐ விஷேட காரணத்தின் பொருட்டு நடத்தப்படும் கிரியைகள் நைமித்திய கிரியைகள் ஆகும்.
   (உ-ம்) மாசி மகம்
   சிவராத்திரி

5. காமிய கிரியை எனப்படுவது யாது?
   ௐ குறிப்பிட்ட நற்பலன் ஒன்றை விரும்பிச் செய்யப்பெறுவது காமிய கிரியை எனப்படும்.

6. நைமித்திய கிரியைகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது?
   ௐ வாரம் ஒருமுறை- சுக்கிரவாரம், சோமவாரம்
   ௐ இருவாரங்களுக்கு ஒருமுறை- பிரதோஷம்
   ௐ மாதம் ஒருமுறை- கார்த்திகை, சதுர்த்தி, சஷ்டி, மாதப்பிறப்பு, அமாவாசை
   ௐ வருடம் ஒருமுறை- மாசிமகம், சிவராத்திரி, ஆடிப்பூரம், ஆவணிசதுர்த்தி, ஆவணிமூலம், நவராத்திரி
   ௐ 12 வருடத்திற்கு ஒருமுறை- மகாமகம், கும்பாபிஷேகம்

## 03. சிவராத்திரி

1. சிவராத்திரி எத்தனை வகைப்படும்? அவை எவை?
   5 வகைப்படும்
   ௐ மஹா சிவராத்திரி
   ௐ மாத சிவராத்திரி
   ௐ யோக சிவராத்திரி
   ௐ பட்ச சிவராத்திரி
   ௐ நித்திய சிவராத்திரி

2. மஹா சிவராத்திரி எப்போது அநுட்டிக்கப்படுகின்றது?
   ௐ மாசி மாத தேய்பிறைச் சதுர்த்தசி

3. சிவராத்திரி விரதம் நோற்றுப் பலன்பெற்றவர்கள் யாவர்?
   ௐ இந்திரன், குபேரன், இராஜசேகரப் பாண்டியன்

4. சிவராத்திரிவிரதம் அநுட்டிக்கும் முறைகள் கூறுக?
   ௐ மகா சிவராத்திரி தினத்தின் முன் தினமான திரியோதசியில் ஒரு வேளை பகல் உணவருந்தி மறுநாள் முழுவதும் உபவாசம் இருந்து, சிவராத்திரியின் மறுதினம் பாரணையில் உணவு உண்ணவேண்டும். மேலும் சிவராத்திரி தினத்தில் இரவு முழுவதும் நித்திரை கொள்ளாது விழித்திருந்து, சிவாலயத்தில் நடைபெறும் நான்கு சாமப் பூசை வழிபாடுகளின் போதும்
   இலிங்க தரிசனம் செய்வது முக்கியமான விதியாகும்.

5. சிவராத்திரி விரதம் பற்றிக் கூறும் நூல்கள் எவை?
   ௐ கந்த புராணம்
   ௐ திருவிளையாடற் புராணம்
   ௐ இலிங்க புராணம்
   ௐ சிவமகா புராணம்

6. சிவராத்திரி பற்றிய புராணக்கதை கூறும் படிப்பினை யாது?
   ௐ ஆணவம் கொண்டவர்களால் இறைவனை அறிய முடியாது என்ற பேருண்மை வெளிப்படுகின்றது

7. இவ்விரதத்தை அனுஷ்டிப்பதால் உண்டாகும் நன்மைகள் யாவை?
   ௐ பிறவிகளில் செய்த பாவங்கள் நீங்கும்
   ௐ உலகில் நன்மை பெருகும்
   ௐ எங்கள் வாழ்வு வளம் பெறும்

## 04. நாள் மங்கலம்

1. நாள் மங்கலம் என்பதன் விளக்கம் யாது?
   - ௐ பிறந்த நாளைக் குறிக்கின்றது

2. வாழ்வியற் சடங்குகளுள் பிறந்த நாள் எவ்வகையில் வேறுபடுகின்றது?
   - ௐ ஏனைய வாழ்வியற் சடங்குகள் ஒரு தடவை மாத்திரமே இடம் பெறும். ஆனால், பிறந்த நாள் வருடா வருடம் நினைவு கூரப்படும்

3. நாம் ஏன் பிறந்த நாளைக் கொண்டாட வேண்டும்?
   - ௐ இப்பூலகில் பிறந்துள்ள நாம் ஒவ்வொருவரும் இறைவனுக்கு நன்றிக்கடன்பட்டவர்கள். ஆகவே நாம் பிறந்த தினம்(நட்சத்திர நாள்) இறைவனுக்கும் எம்மைச் சார்ந்தவர்களுக்கும் நன்றி செலுத்துவதற்கு பிறந்த நாளைக் கொண்டாட வேண்டும்.

4. பிறந்த நாளை எவ்வாறு கொண்டாடுவது சிறப்பானது?
   - ௐ வறியவர்கள், முதியவர்கள், குழந்தைகளுடன் பிறந்த நாளைக் கொண்டாடுவது சிறந்ததாகும்.

5. பிறந்த நாளில் நாம் ஏன் புண்ணிய காரியங்களில் ஈடுபட வேண்டும்?
   - ௐ நாம் மட்டும் மகிழ்ச்சியாக இராது பிறரையும் மகிழ்ச்சியாக வைப்பதற்காகவாகும்

6. பிறந்த நாளன்று ஒருவர் செய்ய வேண்டிய காரியங்கள் எவை?
   - ௐ நீராடி, புத்தாடை அணிதல்
   - ௐ வீட்டில் பூரண கும்பம் வைத்து விளக்கேற்றுதல்
   - ௐ தோத்திரப்பாடல்கள் பாடி இறைவனை வழிபடுதல்
   - ௐ பெற்றார், பெரியவரிடம் ஆசிர்வாதம் பெறல்
   - ௐ நண்பர்கள், உறவினர்களுடன் பகிர்ந்துண்டு மகிழ்தல்

# 05. சம்பந்தர் தேவாரம்

1. சிதம்பரத்தின் சிறப்பு யாது?
   - ௐ இறைவன் எழுந்தருளியிருக்கும் இடமெல்லாம் கோயிலாக விளங்கினும் சிதம்பரத் தலமே கோயில் என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிறது.

2. சிதம்பரத்தில் வேள்விகளைச் செய்வோர் யார்?
   - ௐ அந்தணர்கள்

3. வேள்வி எவ்வாறு செய்யப்படுகின்றது? அதன் நோக்கம் யாது?
   - ௐ வேதாகமங்களிற் கற்றபடி தீ வளர்த்து வேள்வி செய்யப்படுகிறது.
   - ௐ நாட்டிலே துன்பம் வராது இருப்பதற்கு.

4. யாரைப் பாவங்கள் பற்றாது என்று இப்பாடலிற் கூறப்படுகின்றது?
   - ௐ மூவுலங்களுக்கும் முதல்வராகிய எம்பெருமானின்(சிவனின்) தூக்கிய திருவடியைப் பற்றிக் கொண்டவர்கள்

5. இப் பாடலில் தில்லைச் சிற்றம்பலத்து இறைவனின் தோற்றம் பற்றி யாது குறிப்பிடப்பட்டள்ளது?
   - ௐ சிறப்புப் பொருந்திய சிற்றம்பலத்தின் கண்ணே இளம்பிறையைத் தம் சடா முடியில் தாங்கிய படி எழுந்தருளியிருப்பவர் எனக் கூறப்படுகின்றது.

**II**

1. திருக்கழுமலத்தில் இறைவனும் இறைவியும் எப்பெயரோடு வீற்றிருக்கின்றார்கள்?
   - ௐ இறைவன் - திருத்தோணியப்பர்
   - ௐ இறைவி – பெரியநாயகி

2. “மண்ணில் நல்ல வண்ணம் வாழ” யாது செய்தல் வேண்டும் என்று இப்பாடலிற் கூறப்பட்டுள்ளது?
   - ௐ திருத்தோணியப்பரையும், பெண்களுள் நல்லாளாகிய உமாதேவியாரையும் வணங்க வேண்டும்

3. திருஞானசம்பந்தர் மதுரைக்கு வந்த காரணம் யாது?
   - ௐ பாண்டிய மன்னனை சமண சமயத்திலிருந்து மீட்பதற்கு

# 06. புதுவருடப் பிறப்பு

1. பண்டிகை என்றால் என்ன?
   - ௐ சமயம் சார்ந்தும், சமூகம் சார்ந்தும் பல்வேறு வழிபாடுகள், விருந்துகளுடன் கொண்டாடப்படுவது பண்டிகையாகும். இதனை நாம் பெருநாள், விஷேட நாள் எனவும் கூறலாம்.

2. பண்டிகைகளைக் கொண்டாடுவதால் உண்டாகும் நன்மைகள் மூன்று கூறுக?
   - ௐ உறவினர்களின் இல்லங்களுக்குச்சென்று வாழ்த்துக் கூறுதல், அளவளாவி மகிழ்தல், குடும்பத்தினரிடையே இருந்த மனக் கசப்புக்களை மறந்து உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ளுதல், குடும்ப அங்கத்தவரிடையே நெருக்கத்தையும் அன்புப் பிணைப்பையும் ஏற்படுத்திக்கொள்ளல்.

3. புதுவருடப் பிறப்பை எப்போது நாம் கொண்டாடுகிறோம்?
   - ௐ பன்னிரு இராசிகளுள் 1 வதான மேடராசியில் சூரியன் சஞ்சரிக்கும் காலம் சித்திரை மாதமாதம். சூரியன் மேடராசியில் பிரவேசிக்கும் நாளையே புதுவருடப் பிறப்பாகக் கொண்டாடுகின்றோம்.

4. மருத்துநீர் யாரால், எவ்வாறு தயாரிக்கப்படுகின்றது?
   - ௐ ஆலய அர்ச்சகர்களால்
   - ௐ மருத்துவ குணமடைய இலைகள், பூவகைகள், வாசனைத் திரவியங்கள் போன்றவற்றை நீரில் இட்டுக் காய்ச்சி மருந்து நீர் தயாரிப்பார்கள்.

5. புதுவருடத்தினத்தன்று நாம் ஆரம்பிக்கும் நாட்காரியங்கள் எவை?
   - ௐ புதுக்கணக்குப் பதிதல்
   - ௐ ஏர்மங்கலம்
   - ௐ வித்தியாரம்பம்

# 07. கண்ணப்ப நாயனார்

1. திண்ணனின் பெற்றோர்கள் யாவர்? நண்பர்கள் யாவர்?
   - ௐ தாய் - தத்தை
   - ௐ தந்தை – நாகன்
   - ௐ நண்பர்கள் - நாணன், காடன்

2. காளத்தி மலையை அணுகும்போது திண்ணனாரிடம் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?
   - ௐ மலையை அணுக அணுக திண்ணனாருக்கு ஏதோ பாரம் குறைந்து வருவது போலிருந்தது உள்ளத்திலும் இனம்புரியாத இன்பம் உண்டானது

3. இறைவனுக்குரிய இறைச்சியை திண்ணனார் எவ்வாறு தயார் செய்தார்?
   - ௐ திண்ணனார் பன்றி இறைச்சியைத் தாமே நெருப்பில் வாட்டினார், வெந்த இறைச்சித்துண்டுகளை மென்று சுவை பார்த்து நல்லனவற்றை மட்டும் தேக்கிலைக் கல்லையிலே வைத்தார்

4. சிவகோசரியார் தினமும் எவ்வாறு பூசை செய்த வந்தார்?
   - ௐ சிவாகம விதிப்படி பூசை செய்து வந்தார்.

5. காளத்திநாதரின் வலக்கண்ணிலிருந்து இரத்தம் வடிவதைக் கண்ட திண்ணனார் யாது செய்தார்?
   - ௐ வலக்கண்ணிலிருந்து இரத்தம் வடிவதைக் கண்டு துடிதுடித்தார் ஓடிச் சென்று பச்சிலை மருந்துகளைப் பிடுங்கி அவற்றைப் பிழிந்து எம்பெருமானின் கண்களில் வார்த்தார். இரத்தம் வடிதல் தடைப்படாமை கண்ட மிகவும் வருந்தினார். சுவாமியின் திருமேனியைப் பற்றியபடி கதறியழுதார். ''ஊனுக்கு ஊனிடல் வேண்டும்'' எனும் பழமொழி அவர் நினைவுக்கு வந்தது. கண்ணுக்குக் கண்கொடுக்க விரும்பிய திண்ணனார் அம்பினாலே தம் கண்ணைத் தோண்டி
     இறைவனது கண்ணில் அப்பினார் இரத்தம் வடிதல் நின்றது

6. “மாறிலாய் என் வலத்தில் நிற்க” என்ற அடியின் பொருள் யாது?
   - ௐ என்றுமே சிவனது வலப்பாகத்தில் நிற்க என்பதாகும்.

7. இக்கதை உணர்த்தும் படிப்பினை யாது?
   - ௐ இறைவன் தன்னலமற்ற அன்புக்கு அடிமையாகும் தன்மையுடையவர்.

# 08. அப்பர் தேவாரம்

**I**

1. திருமருகற்பெருமானுடைய திருவடிகளை நாவுக்கரசர் எப்படி வழிபட்டார்?
   - ௐ வாயினால் வாழ்த்தி உடம்பினால் வணங்கி வழிபட்டார்

2. "வாழ்த்தி வணங்குதல்" என்ற தொடரினால் உணர்த்தப்படுவது யாது?
   - ௐ இறைவனை வாயினால் வாழ்த்தி (மனமும் மெய்யும் உருக) வணங்குதலைச் சுட்டுகின்றது.

3. திருமருகல் இறைவனை வணங்கினால் கிடைக்கும் பேறுகள் யாவை?
   - ௐ தவத்தில் மேம்படலாம்
   - ௐ அறியாமை நீங்கப் பெறலாம்
   - ௐ மாறுபட்ட மனத்தை திருத்திக் கொள்ளலாம்
   - ௐ எதற்கும் மேலான சிவானந்தமாகிய தேனை உண்டு அனுபவிக்கலாம்

**II**

1. சம்பந்தப் பெருமானும் அப்பர் பெருமானும் இணைந்து செய்த அற்புதங்கள் எவை?
   - ௐ திருவீழிமிழலையில் படிக்காசு பெற்றுப் பஞ்சம் போக்கியமை
   - ௐ திருமறைக் காட்டுத் திருக்கோயிலில் திருக்கதவினை அப்பர் பெருமான் திறக்கவும் சம்பந்தர் அடைக்கவும் பாடியமை

2. கதவு பூட்டப்பட்டிருந்த தலம் எது?
   - ௐ திருமறைக்காடு

3. இப்பாடலில் சிவபெருமான் எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறார்?
   - ௐ இனிமையான மொழி பேசுகின்ற உமாதேவியாரை இடப்பாகத்தில் கொண்டவர்
   - ௐ பூமியில் உள்ளவர்கள் வலம் செய்து வணங்குதற்குரிய முறையில் திருமறைக்காட்டில் கோயில் கொண்டவர்

4. பூட்டப்பட்டிருந்த கதவைத் திறக்கப் பாடியவர் யார்? பின் அடைக்கப்பாடியவர் யார்?
   - ௐ திறக்கப்பாடியவர் - அப்பர்
   - ௐ அடைக்கப்பாடியவர் - சம்பந்தர்

# 09. விரதங்கள்

1. விரதம் அனுட்டிப்பதன் நோக்கம் யாது?
   - ௐ நேர் வழியில் வாழ்கையை அமைத்துக் கொள்வதற்கு
   - ௐ இறையுணர்வையும், மனவலிமையையும் வலுப்படுத்துவதற்கு

2. விரதம் அனுட்டிக்கும் பொதுவான விதிமுறைகள் யாவை?
   - ௐ அதிகாலையில் துயில் எழல், நீராடுதல், தோய்த்துலர்ந்த ஆடையணிதல். இறைவழிபாடுசெய்தல், ஆலயங்களில் இறைதரிசனம் செய்தல், தோத்திரங்களை ஓதுதல், உணவைத் தவிர்த்தல் அல்லது குறைத்தல், மனக் கட்டுப்பாடு பேணுதல்

3. விரதம் அனுட்டிப்பதால் ஏற்படும் பயன்கள் ஐந்து கூறுக?
   - ௐ தன்னம்பிக்கை, பணிவு, பக்தி, அன்பு, தியாகம், சகிப்புத்தன்மை, ஒழுக்கம், நேர்மை

4. பங்குனி உத்திரநாள் சிறப்புப்பெறக் காரணம் யாது?
   - ௐ சிவபெருமான் பங்குனி உத்திர நாளில் இமய மலைக்குச் சென்று பார்வதியைத் திருமணம் செய்த பொண்டமை.

5. வைகாசி விசாகம் சைவர்களுக்கும், பௌத்தர்களுக்கும் எவ்வாறு முக்கியத்துவம் உடையதாக உள்ளது?
   - ௐ சைவசமயம் - சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து முருகப்பெருமான் திரு அவதாரம் செய்ததினம்
   - ௐ பௌத்தர்கள் - புத்தர் பெருமான் பிறந்ததும், ஞானம் பெற்றதும், பரிநிர்வாணம் அடைந்ததும் வைகாசி விசாகத்திலாகும்.

6. ஆனி உத்தரம் சிறப்புப் பெறக் காரணம் யாது?
   - ௐ சிதம்பர நடராஜர் தரிசனத்தால் சிறப்புப் பெற்றது.

# 10. ஆலய வழிபாடு - II

1. ஆலயத்திற்கு நாம் ஏன் சுத்தமாகச் செல்ல வேண்டும்?
   - ௐ நாமும் நமது சூழலும் சுத்தமாக விளங்கவேண்டும் என்பதற்காக

2. ஆலயத்தை வலம் வந்து வணங்குவதால் ஏற்படும் நன்மை யாது?
   - ௐ வலம் வந்து வணங்குவதால் எமது பாதத்தின் அடிப்பாகத்தில் இருக்கும் உடலை இயக்கும் நரம்புகளின் முடிச்சுகள் தூண்டப்படும். மனமும் உடலும் இறுக்கம் நீங்கித் தளர்வடையும்.

3. தலவிருட்சத்தின் பயன் யாது?
   - ௐ தலவிருட்சத்தை வலம் வரும் போது அவற்றிலிருந்து வெளியேறும் மூலிகைக் காற்றானது எமது உடலிற்கு மிகுந்த ஆரோக்கியத்தை வழங்குகின்றது.

4. கோபுரங்களில் கலசங்கள் ஏன் அமைக்கப்படுகின்றன?
   - ௐ இவை மின்காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியைக் கொண்டுள்ளன. நாம் ஆலயத்தினுட் சென்று வழிபடும் போது இந்த சக்தி நமது உடலிலும் சேர்கின்றது. இதனால் நமக்குப் புத்துணர்வு, உள்ளத்தூய்மை, நோய் எதிர்ப்பு சக்தி என்பவை கிடைக்கப்பெறுகின்றன.

5. எமது உடலின் 6 ஆதார ஸ்தானங்களும் எவை?
   - ௐ மூலாதாரம்
   - ௐ சுவாதிஸ்டானம்
   - ௐ மணிபூரகம்
   - ௐ அநாகதம்
   - ௐ விசுத்தி
   - ௐ ஆக்ஞை

## 11. ஈழத்து ஆலயங்கள்

அ. விநாயகர் ஆலயம் - முறிகண்டி விநாயகர் ஆலயம்

ஆ. சிவாலயம் - முன்னேஸ்வரம்

1. முறிகண்டி விநாயகர் ஆலயம் எங்கு அமைந்துள்ளது?
   ௐ முல்லைத்தீவு மாவட்டத்தில் யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் அமைந்துள்ளது.

2. முறிகண்டிப் பிள்ளையாரின் சிறப்பு யாது?
   ௐ மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி மிக்கவர்

3. முன்னேஸ்வர ஆலயத்தின் இறைவனதும் இறைவியினதும் பெயர்களைக் கூறுக?
   ௐ இறைவன் - முன்னை நாதர்
   ௐ இறைவி – வடிவாம்பிகை

4. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் முன்னேஸ்வர ஆலயத்திற்குச் செய்த பணி யாது?
   ௐ இந்தியச் சிற்பிகளைக் கொண்டு ஆலயத்தை மீள அமைத்துக் கும்பாபிஷேகமும் செய்வித்தான்.

5. இராமருக்கு பிரம்மஹத்தி தோஷம் ஏற்படக் காரணம் யாது?
   ௐ இராமன், இராவணனைக் கொன்றதால்.

6. இராமர் அதனை எவ்வாறு நீக்கினார்?
   ௐ முன்னேஸ்வர ஆலயத்தை வழிப்பட்டு நீக்கினார்.

7. முன்னேஸ்வர ஆலயத்தின் தலவிருட்சம், தீர்த்தத்தின் பெயரை எழுதுக?
   ௐ தலவிருட்சம் - அரசமரம்
   ௐ தீர்த்தம் - மாயவனாறு (தெதுறு ஓயா)

8. அழகேஸ்வரம் என அழைக்கப்படும் ஆலயம் எது?
   ௐ முன்னேஸ்வரம்

இ. அம்மன் ஆலயம்

***I*** காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயம்

***II*** உடப்பு ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயம்

1. இலங்கையில் கண்ணகியம்மன் வழிபாடு சிறப்புப் பெற்றுள்ள பிரதேசம் எது?
   ௐ மட்டக்களப்பு

2. இலங்கையில் கண்ணகியம்மன் வழிபாடு யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது?
   ௐ முதலாம் கஜபாகு மன்னனால்

3. உடப்பு திரௌபதையம்மன் ஆலயச் சடங்குகள் எத்தனை தினங்கள் இடம்பெறும்? அவற்றுள் சிறப்பான சடங்கு யாது?
   ௐ 18 தினங்கள்
   ௐ தீ மிதிப்புச் சடங்கு

4. உடம்பு திரௌபதையம்மன் ஆலயச் சடங்கின் போது இசைக்கப்படும் இசைக்கருவி யாவை?
   ௐ உடுக்கு, பறை

5. திரௌபதையம்மன் ஆலய வழிபாட்டுடன் தொடர்புடைய இதிகாசம் எது?
   ௐ மகாபாரதம்

6. உடப்பு திரௌபதையம்மன் ஆலயம் எங்கு அமைந்துள்ளது?
   ॐ புத்தளம் எனும் மாவட்டத்தில் உடப்பு எனும் கிராமத்தில்

7. சிங்கள மக்களும், தமிழ் மக்களும் தங்களது கிராமியத் தெய்வமாகப் போற்றும் தெய்வம் எது?
   ॐ கண்ணகி

8. கண்ணகி வழிபாட்டால் எவை விருத்தி பெறும் என கிராமிய மக்கள் நம்புகின்றனர்?
   ॐ தீராத நோய்கள் நீங்கும்
   ॐ வேளாண்மை சிறக்கும்
   ॐ ஆடு, மாடுகள் பெருகும்

ஈ. முருகன் ஆலயம் - ***I*** உகந்தை முருகன் ஆலயம்

***II*** கதிர்காமம்

உ. விஷ்ணு ஆலயம் - ***I*** வல்லிபுர ஆழ்வார் ஆலயம்

1. உகந்தை முருகனாலயத்திற்கு அப் பெயர் ஏற்படக் காரணம் யாது?
   ॐ மகேந்திரபுரியில் சூரன்போரை நிகழ்த்திய பின், திருச்செந்தூர் திரும்பும் வழியில் ''இவ்விடம் எமக்கு உகந்தது'' என்று கூறி, முருகன் தங்கிய இடமாகையால் உகந்தை மலை என அழைக்கப்படுகின்றது.

2. கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் பூசை செய்பவர் யார்?
   ॐ பூசாரி (கப்புறாளை)

3. கதிர்காமத்தில் பூசை எவ்வாறு நடைபெறும்?
   ॐ இவ்வாலயத்தின் கருவறை திரையால் மூடப்பட்டுக் காணப்படும். பூசாரியைத் தவிர வேறு யாரும் உட்செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. பூசாரி பக்தி சிரத்தையுடன் வாய் கட்டிப்பூசை செய்வார்.

4. வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் மூல மூர்த்தி யாது?
   ॐ விஷ்ணுவின் சுதர்சன சக்கரம்

5. வல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவத்தில் விசேடமாக நடைபெறும் திருவிழா யாது?
   ॐ 16ம் நாள் நடைபெறும் சமுத்திர தீர்த்தம் மிக விசேடமானது.

6. வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் மகோற்சவம் எப்போது இடம்பெறும்?
   ॐ புரட்டாதிமாத அமாவாசையில் தொடங்கும் மகோற்சவம் 17 தினங்கள் நடைபெறும்.

## 12. உபநிடத சிந்தனைகள்

1. எமது சமயத்தின் முதல் நூல்கள் எவை?
   - ௐ வேதங்கள், ஆகமங்கள்

2. நான்கு வேதங்களும் எவை?
   - ௐ இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்

3. வேதங்கள் எவ்வாறு வகுக்கப்பட்டுள்ளன?
   - ௐ சங்கிதைகள்
   - ௐ பிராமணங்கள்
   - ௐ ஆரணியகங்கள்
   - ௐ உபநிடதங்கள்

4. உபநிடதம் என்றால் என்ன?
   - ௐ வேதங்களின் சாரமாக விளங்குவது உபநிடதங்களாகும்
   - ௐ இதனை வேதசிரசு, வேதாந்தம் என்றும் அழைப்பர்

5. உபநிடதங்கள் நான்கின் பெயர்களைக் குறிப்பிடுக?
   - ௐ கடோபநிடதம், பிருகதாரணிய உபநிடதம், சுவேதாஸ்வர உபநிடதம், கேநோபநிடதம், ஐதரேய உபநிடதம், மைத்ரீ உபநிடதம்.

6. இறைவன் பற்றி சுவேதாஸ்வதர உப நிடதம் கூறும் விடயங்கள் 3 தருக?
   - ௐ உயிர்கள் அனைத்திலும் இறைவன் வாழ்கிறான்
   - ௐ இறைவன் பிறப்பு இறப்பைக் கடந்தவன்
   - ௐ ஆனால் உயிர்களோ பிறப்பு - இறப்பு எனும் சுழற்சிக்கு உட்படுவன.
   - ௐ பாலில் வெண்ணெய் போல இறைவன் எங்கும் பரந்து காணப்படுகின்றான்
   - ௐ அவனை அறிய, தியாகம் செய்தல் வேண்டும்
   - ௐ ‘‘ஓம்’’ எனும் பிரணவ மந்திரம் ,தியானம் என்பன இறைவனை உணர உதவும்.
   - ௐ இறைவனை அறிந்தோர், மரணமில்லாப் பெருவாழ்வைப் பெறுவர்.

## 13. சுந்தரர் தேவாரம்

**I**

1. இத்தேவாரம் சுந்தரால் எச் சந்தர்ப்பத்தில் பாடப்பட்டது?
   - ஓ குண்டையூரில் பெற்ற நெல்லை பரவையாரின் மாளிகைக்குக் கொண்டு வர உதவியாளர் யாரும் கிடைக்கவில்லை அப்போது பாடப்பட்டது.

2. "வாளன கண்மடவாள்" என்ற தொடர் யாரைக் குறிப்பிடுகிறது?
   - ஓ பரவையாரை

3. சுந்தரருக்கும், இறைவனுக்கும் இடையிலான உறவு இப்பாடலினூடாக எவ்வாறு புலப்படுகின்றது?
   - ஓ தோழமை உறவு

4. "நீள நினைந்தடியேன்" எனும் பாடலின் பண் யாது?
   - ஓ நட்டராகம்

**II**

1. இப் பாடல் பாடப்பெற்ற சந்தர்ப்பத்தைத் தருக?
   - ஓ திருவாரூர்க் கோயிலின் முன் ஆயிரங்கால் மண்டபம் ஒன்று உள்ளது. அது தேவாசிரியன் மண்டபம் எனப்படும். சுந்தரமூர்த்தி நாயனார் அங்கு கூடியிருந்த சிவனடியார்களை வணங்கித் தாம் அவர்கள் எல்லோருக்கும் அடியவன் என்று கூறி திருப்பதிகத்தைப் பாடினார்.

2. இப் பாடலில் இடம் பெற்றுள்ள நாயன்மார்கள் யாவர்?
3. அவர்களை சிறப்பித்து கூறும் அடைமொழிகளைக் கூறுக?
   - ஓ திரு நீல கண்ட நாயனார் - குயவர் குலத்தவர்
   - ஓ இயற்பகை நாயனார், ஓ இளையான்குடி மாறன் } சிவனடியார்களுக்கு எதனையும் இல்லை என்று கூறாதவர்
   - ஓ மெய்பொருள் நாயனார் - வெற்றி பெறுவதில் வல்லவர்
   - ஓ விறன் மிண்ட நாயனார் - பெருஞ்சோலைகள் சூழ்ந்த திருச்செங்குன்றூரவர்
   - ஓ அமர்நீதி நாயனார் - அல்லிப் பூவும் மென்மையான முல்லைப்பூவும் கலந்து கட்டிய மாலை அணிந்தவர்.

4. அடியார்கள் பற்றிப் பாடப்பெற்ற முதல் நூல் யாது? அதனைப்பாடியவர் யார்?
   - ஓ திருத்தொண்டத் தொகை
   - ஓ சுந்தரர்

## 14. திருமுறைகளில் புராண இதிகாசக் கருத்துக்கள்

1. புராணம் என்றால் என்ன? இதிகாசம் என்றால் என்ன?
   - ௐ புராணம் - பழமையானது (அடியார்களின் செயல்கள், இறைவனின் சிறப்பு)
   - ௐ இதிகாசம் - இது இவ்வாறு நடந்தது

2. புராணக் கதைகள் எவற்றைக் கூறுகின்றன?
   - ௐ சிவ பக்தியையும், சிவனது வீரதீரச்செயல்கள், அருட்டிறன், தனித்துவம், மேன்மை என்பவற்றைக் கூறுகிறது.

3. 'விடமுண்ட கண்டன்' என்ற வரிகளுடன் தொடர்புடைய புராணக் கதையைச் சுருக்கமாக எழுதுக?
   - ௐ அழிவில்லாத பெருவாழ்வு பெற விரும்பிய தேவர்களும் அசுரர்களும் மந்தரமலையை மத்தாகவும் வாசுகிப்பாம்பை கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடையும் போது துன்புற்ற வாசுகிப்பாம்பு விசத்தைக் கக்கியது. அதன் கோரத்தைத் தாங்க முடியாது சிவபெருமானிடம் முறையிட அந்த நஞ்சை எடுத்து உண்ண, அது அவரது கண்டத்தில் தங்கியது.

4. இராவணன் கயிலை மலையைப்பெயர்த் தெடுக்க முயன்றதன் காரணம் யாது?
   - ௐ இராவணன் புஷ்பக விமானத்தில் ஆகாயமார்க்கமாகச் செல்லும் போது கயிலை மலை தடையாக அமைந்தமையால்

5. சிவபெருமான் இராவணனின் கர்வத்தை எவ்வாறு அடக்கினார்?
   - ௐ சிவபெருமான் தமது திருவடிப்பெருவிரலினால் மலையை ஊன்றி, இராவணனை நசித்து அவனது கர்வத்தை அடக்கினான்.

6. இராவணன் சாமகானம் பாடியதன் காரணம் யாது?
   - ௐ இறைவன் சாமவேதப்பிரியன் என்பதை இராவணன் உணர்ந்தமையால்

7. சாமகானம் பாடிய இராவணனுக்கு இறைவன் எவற்றை வழங்கினார்?
   - ௐ மந்திரவாளும், பிறவரங்களும்

## 15. சைவப்பெரியார் சிவபாத சுந்தரனார்

1. சைவப்பெரியார் சிவபாதசுந்தரனாருக்கு முன்னோடியாக விளங்கியவர் யார்?
   - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

2. சைவப் பெரியார் எந்த மொழிகளில் புலமை பெற்றிருந்தார்?
   - தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம்

3. சிவபாதசுந்தரனார் ஆற்றிய பணிகள் பற்றி விபரிக்குக
   - மேனாட்டாரது பழக்கவழக்கங்களால் எமது சைவப் பண்பாடு அழிவுறுவதைக் கண்டு வருந்தியமையால் பல நூல்களை எழுதி வெளியிட்டார்
   - மதமாற்றத்தைத் தீவிரமாகக் கண்டித்தார்
   - இந்துபோட் எனப்படும் சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவராகப் (1928-1930)பணியாற்றினார்
   - அடியவர்கள் தங்குவதற்கென திருஞான சம்பந்தர் மடத்தைக்கட்டுவித்தார்.
   - மிருகபலியை எதிர்த்தார்

4. சைவ பெரியார் எழுதிய நூல்களுள் ஐந்தைக் குறிப்பிடுக
   - சைவசமயசாரம்
   - சைவக் கிரியை விளக்கம்
   - கந்தபுராண விளக்கம்
   - அப்பர் சுவாமிகளின் தேவாரச் சிறப்பு
   - சைவ மகத்துவம்

5. ‘சைவப்பெரியார் அவர்களது வாழ்கை சமய வாழ்கையாகும்’ என்று பண்டிதமணி அவர்கள் கூறக் காரணம் யாது?
   - சைவத்தமிழ் பண்பாடு பரவப் பல வகையிலும் தமது வாழ்வை அர்ப்பணித்தமையால் ஆகும்.

6. சிவபாத சுந்தரனார் எப்போது? எங்கு பிறந்தார்?
   - 1878ம் ஆண்டு, யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் உள்ள புலோலி
   - தாய் - வள்ளியம்மை
   - தந்தை – சுப்பிரமணியபிள்ளை
   - இறப்பு – 1953

## 16. மக்கள் சேவையே மகேசன் சேவை

***I*** திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்

***II*** திருநாவுக்கரசு நாயனார்

1. திருஞானசம்பந்தர் திருக்கொடிமாடச் செங்குன்றூரில் செய்த மக்கள் பணி யாது?
   ॐ பனிச்சுரம் நீக்கியமை

2. "காரைகள் கூகைமுல்லை" என்னும் பதிகம் யாரால், எதற்காகப் பாடப்பட்டது?
   ॐ சம்பந்தரால்
   ॐ பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கப் பாடப்பட்டது.

3. திருநாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் இணைந்து ஆற்றிய மக்கள் பணி யாது?
   ॐ திருவீழிமிழலையில் மக்களின் பஞ்சம் தீர்க்கப் படிக்காசு பெற்றமை

4. திருநாவுக்கரசர் உழவாரப்படையாளி என்று போற்றப்படுவதற்கான காரணம் யாது?
   ॐ தலங்களில் சரியைத் தொண்டு புரிந்து வழிபட்டதனால் அவ்வாறு போற்றப்படுகிறார்.

***III*** சுந்தரமூர்த்தி நாயனார்

***IV*** மாணிக்கவாசக சுவாமிகள்

1. சுந்தரர் திருத்தொண்டர்களின் பெருமையை எவ்வாறு உலகறியச் செய்தார்?
   ॐ 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று சிவபெருமான் அடியெடுத்துக் கொடுத்தார். அதன் மூலம் திருத்தொண்டர்களின் பெருமையை உலகறியச் செய்தார்.

2. வாதவூரர் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட தலம் யாது?
   ॐ திருப்பெருந்துறை

3. திருச்சாழல் என்னும் பதிகம் எவ்வாறு அமைந்துள்ளது?
   ॐ வினாக்களும் விடையும் அமையும் படியாக அமைந்துள்ளது.

4. சமயகுரவர் நால்வரும் மக்கள் பணி புரிந்ததன் மூலம் நாம் உணரக் கூடிய உண்மை யாது?
   ॐ மக்கள் சேவை மகேசன் சேவை

# 17. திருவாசகம்

1. மாணிக்கவாசகர் பாடிய நூல்கள் எவை? அவை எத்தனையாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன?
   ௐ திருவாசகம், திருக்கோவையார்
   ௐ 8ம் திருமுறையாக

2. இறைவன் மாணிக்கவாசகரை எங்கு எவ்வாறு ஆட்கொண்டருளினார்?
   ௐ திருப்பெருந்துறையில், குருந்த மர நிழலில் ஆட்கொண்டருளினார்

3. "பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே" என்ற தொடரில் வெளிப்படும் இறைவனின் தன்மை யாது?
   ௐ மண்ணும் விண்ணுமாய் எங்கும் நீக்கமற நிறைந்து விளங்குபவர் என இறைவனின் தன்மை போற்றப்படுகிறது.

4. மாணிக்கவாசகர் இறைவனைப் பிரிந்திருக்க ஆற்றாது தவிப்பதை எடுத்துக் காட்டும் வரிகள் எவை?
   ௐ ''ஆரோடு நோகேன் ஆர்க்கெடுத்து உரைக்கேன்
   ஆண்ட நீ அருளிலையானால்
   வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்''

5. மாணிக்கவாசகர் யாரிடம் முதலமைச்சராக இருந்தார்?
   ௐ அரிமர்த்தன பாண்டியனுக்கு

6. "பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே" எனும் பாடல் எத்தலத்தின் மீது பாடப்பட்டது?
   ௐ திருப்பெருந்துறை

7. இறைவனால் எழுதப்பட்ட மாணிக்கவாசகரின் நூல் எது?
   ௐ திருவாசகம்

# 18. விழுமியங்கள்

1. விழுமியம் என்றால் என்ன?
   ॐ மனித வாழ்வை மேம்படுத்த உதவும் பெறுமதி மிக்க வாழ்க்கைப் பண்புகள் விழுமியம் ஆகும்

2. மனக்கட்டுப்பாட்டை எவற்றின் மூலம் நாம் வளர்த்துக் கொள்ளலாம்?
   ॐ யோகப்பயிற்சி, மூச்சுப்பயிற்சி, தியானம் போன்ற சாதனங்களாலாகும்

3. கொடையின் பெருமையை உலகத்துக்கு எடுத்துக் காட்டிய சான்றோர் நால்வரைக் குறிப்பிடுக
   ॐ பாரி
   ॐ பேகன்
   ॐ அதியமான்
   ॐ சிபிச்சக்கரவர்த்தி
   ॐ இளையான் குடிமாற நாயனார்
   ॐ கர்ணன்

4. முதியோரைக் கனம் பண்ண வேண்டியதன் அவசியம் யாது?
   ॐ ஏனெனில் முதியோர்களது அநுபவம், அறிவு, அன்பு, என்பன என்றென்றும் எமக்குத்துணை செய்யும் என்பதாலாகும்

5. எமக்குள்ள அடிப்படை உரிமைகள் மூன்றைக் குறிப்பிடுக
   ॐ உயிர் வாழும் உரிமை
   ॐ கல்வி கற்கும் உரிமை
   ॐ நாட்டில் எங்கு வேண்டுமானாலும் வாழும் உரிமை
   ॐ விரும்பிய சமயத்தைப் பின்பற்றும் உரிமை

6. மும்முறை சாந்தி மந்திரத்தை ஓதுவதன் காரணம் யாது?
   ॐ எமக்காகவும், சுற்றத்தவருக்காகவும், பிற உயிர்களுக்காகவும் மங்கலம் வேண்டி அவ்வாறு ஓதுகின்றனர்.

# 19. சைவ சித்தாந்தத்தில் பசு

1. முப்பொருள் எனப்படுவது எவை?
   - ௐ பதி, பசு பாசம்

2. பசு என்பதன் பொருள் யாது?
   - ௐ ஆன்மாக்கள் அநாதியாகவே ஆணவம், கன்மம், மாயை என்னும் பாசத்தால் கட்டுண்டிருப்பதால் பசு என்று அழைக்கப்படுகின்றது.

3. பசுவை சதசத்து என்று அழைப்பதன் காரணம் யாது?
   - ௐ பசு பதியைச் சாரும்போது சத்துப்பொருளாக நிற்கும். பாசத்தைச்சாரும்போது அசத்துப் பொருளாக நிற்கும் இவ்விரு தன்மையும் பசுவுக்கு உள்ளதால் அது ''சதசத்து'' என அழைக்கப்படுகிறது.

4. மூவகை ஆன்மாக்களும் எவை? ஆன்மாக்கள் எவ்வடிப்படையில் மூவகையாகப் பிரிக்கப்படுகின்றன?
   - ௐ சகலர் - ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றினாலும் பீடிக்கப்பட்டவர்கள்.
   - ௐ பிரளயாகவர் - ஆணவம், கன்மம் ஆகிய இரண்டினாலும் பீடிக்கப்பட்டவர்கள்
   - ௐ விஞ்ஞானகலர் - ஆணவ மலம் மட்டினாலும் பீடிக்கப்பட்டவர்கள்.

5. பதிக்கும் பசுவிற்குமான வேறுபாடுகள் மூன்று தருக?

| பதி | பசு |
|---|---|
| ௐ மும்மலங்களால் பீடிக்கப்படாதது | ௐ மும்மலங்களால் பீடிக்கப்பட்டது |
| ௐ அறிவிக்காமலே அறியும் பொருள் | ௐ அறிவித்தால் மட்டும் அறியும் பொருள் |
| ௐ பேரறிவுடையது | ௐ சிற்றறிவுடையது |

# 20. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு

***I*** <u>திருவிசைப்பா</u>

1. ஒன்பதாம் திருமுறையுள் அடங்குபவை எவை?
   ௐ திருவிசைப்பா, திருப்பல்லாண்டு

2. திருவிசைப்பா பாடியோர் எத்தனை பேர்? அவர்களின் பெயர்களைத் தருக?
   ௐ 9 பேர்
   1) திருமாளிகைத்தேவர்
   2) சேந்தனார்
   3) கருவூர்த்தேவர்
   4) பூந்துருத்திநம்பிகாடநம்பி
   5) கண்டராதித்தர்
   6)வேணாட்டடிகள்
   7)திருவாலியமுதனார்
   8)புருடோத்த நம்பி
   9)சேதிராயர்

3. திருவிசைப்பா என்னும் தொடரில் பொருள் யாது?
   ௐ தெய்வத்தன்மையுள்ள இறைவன் புகழைக் கூறும் இசைப்பாடல் எனக் பொருள்படும்

4. இங்கு இறைவனை விளித்துப் பாடிய தொடர்களைத் தருக
   ௐ ஏக நாயகன்
   ௐ போக நாயகன்
   ௐ மேக நாயகன்
   ௐ யோக நாயகன்

***II*** திருப்பல்லாண்டு

1. திருப்பல்லாண்டு யாரால் பாடப்பெற்றது?
   ௐ சேந்தனார்

2. திருப்பல்லாண்டு பாடப்பட்ட சந்தர்ப்பம் யாது?
   ௐ திருவாதிரைத் திருவிழாவிலே தேர்ச் சக்கரம் சேற்றில் அழுந்திப் புதைந்த வேளையில் தேர் தானே அசைந்தோடும் வண்ணம் சிவனை வாழ்த்திப் பாடியது.(சிதம்பரத்தில்)

3. தில்லையில் யார் அகல வேண்டும்? யார் வர வேண்டும் என்று சேந்தனார் பாடுகிறார்?
   ௐ சிவபெருமானை வணங்காமை காரணமாக முரண்பட்ட மனதை உடையவர்கள் இவ்விடத்தில் நில்லாமல் அகலுங்கள். எம்பெருமான் மீது மெய்யன்பு பூண்ட அடியார்கள் விரைவாக இங்கு வாருங்கள் என்கிறார்

4. இப்பாடலில் இறைவனது இயல்புகளாகக் காட்டப்பட்டுள்ளவை யாவை?
   ௐ எல்லா அண்டங்களுக்கும் அப்பாற்பட்ட பரம்பொருள்
   ௐ எல்லை கடந்த ஆனந்த வெள்ளம் போன்றவர்
   ௐ அன்றும் இன்றும் என்றும் உள்ள பொருள்

# 21. திருமந்திரம், பெரியபுராணம், திருப்புகழ்

***I*** திருமந்திரம்

1. திருமந்திரத்தைப் பாடியவர் யார்?
   - ॐ திருமூல நாயனார்

2. திருமந்திரம் எத்தனையாம் திருமுறையில் அடங்குகின்றது?
   - ॐ 10ம் திருமுறையில்

3. பஞ்சாட்சர மந்திரத்தைச் செபிப்பதனால் உண்டாகும் நன்மைகள் எவை?
   - ॐ தீவினை ஒழியும்
   - ॐ புண்ணியம் வளரும்
   - ॐ தேவருமாவர்
   - ॐ முடிவிலே சிவகதியாகிய முத்தியைப் பெறுவார்

4. திருமந்திரம் எத்தனை பாடல்களைக் கொண்டது?
   - ॐ 3000பாடல்கள்

***II*** பெரிய புராணம்

1. பெரியபுராணம் எத்தனை அடியார்களின் வரலாற்றைக் கூறுகிறது?
   - ॐ 63 நாயன்மார்கள் (தனி அடியார்கள்)மற்றும் 9 தொகையடியார்கள்

2. 'இறவாத இன்ப அன்பு வேண்டும்' என்று வேண்டியவர் யார்? யாரிடம் வேண்டினார்?
   - ॐ காரைக்காலம்மையார்
   - ॐ சிவபெருமானிடம்

3. மீண்டும் பிறப்புண்டானால், யாது வேண்டுமென காரைக்காலம்மையார் வேண்டுகிறார்?
   - ॐ மீளவும் பிறப்பு இருந்தால் எம் பெருமானே உன்னை எப்போதும் மறவாத மனம் வேண்டும். இன்னும் ஒன்று வேண்டும், இறைவா! நீ ஆனந்தநடனம் ஆடும் போது நான் உனது புகழை மகிழ்ச்சியுடன் பாடியவாறு உன் திருவடிக்கீழ் இருக்கும் பேற்றினை அருள்வாயாக என்று வேண்டினார்.

***III*** திருப்புகழ்

1. அருணகிரிநாதர் அருளிச் செய்த நூல்கள் எவை?
   - ॐ திருப்புகழ்
   - ॐ கந்தரலங்காரம்
   - ॐ கந்தரனுபூதி
   - ॐ திருவகுப்பு
   - ॐ வேல்விருத்தம்
   - ॐ மயில் விருத்தம்
   - ॐ சேவல் விருத்தம்

2. இத்திருப்புகழில் முருகப் பெருமானை விளித்துப் பாடிய சொற்களைத் தருக
   - ॐ நற்குணத்தவர்களுக்கு நேசன்
   - ॐ இரத்தின கிரிவாசன்
   - ॐ வித்தகன்
   - ॐ அனுக்கிரக சக்தியாய் பதிகின்றவன்
   - ॐ வெற்றி பொருந்திய வேலாயுதத்தை ஏந்தியவன்.

3. அருணகிரி நாதர் முருகப்பெருமானிடம் கேட்கும் வரம் யாது?
   - ॐ பக்தியோடு நான் உன்னை எப்பொழுது உள்ளத்தில் தியானித்து,சிறந்த உனது திருப்புகழ்களைப் பாடி ஞான நிலை பெற்றவனாகுமாறு, பெரு வாழ்வாகிய முத்தி நிலையை அடைய அருள் புரிவாயாக என்கிறார்

4. அருணகிரி நாதரின் இடம் எது?
   - ॐ திருவண்ணாமலை

5. முருகப்பெருமானின் அருட்பண்புகளையும் அருட்செயல்களையும் புகழும் நூல் எது?
   - ॐ திருப்புகழ்

# 22. நாட்டார் வழிபாடு

1. நாட்டார் வழிபாட்டுக்குரிய தெய்வங்கள் குடி கொண்டிருப்பதாகக் கருதப்படும் இடங்கள் யாவை?
   ॐ மரநிழல், தெருவோரம்

2. நாட்டார் வழிபாட்டுச் சடங்குகள் ஐந்து கூறுக
   ॐ ஊர்காவல் செய்தல், பண்டம் எடுத்தல், தெய்வமாடுதல், தீமிதித்தல்

3. மதுரை வீரனை மக்கள் வழிபடுவதன் நோக்கம் யாது?
   ॐ மதுரை வீரன் குதிரையில் வாளுடன் வந்து தீயவர்களை அழிப்பான் என்று மக்கள் நம்புகின்றமையாலும் ஆற்றல் பொருந்திய சிறந்த வீரனாகக் கருதப்படுவதாலும் மதுரை வீரனை மக்கள் வழிபடுகின்றனர்.

4. குமாரத்தன் வழிபாடு எங்கெங்கு காணப்படுகிறது?
   ॐ பாணமை, பொத்துவில், மல்வத்தை

5. நாட்டார் வழிபாட்டு அம்சங்கள் மூன்று கூறுக
   ॐ இவ்வழிபாடு ஆகம நெறி சாராத முறையில் இடம் பெறும்
   ॐ பயபக்தி, நம்பிக்கையுடன் சடங்குகள் இடம்பெறும்
   ॐ சடங்குகளை பூசாரியே ஆற்றுவார்.

6. நாட்டார் தெய்வங்களை வகைப்படுத்துக
   ॐ ஆண்தெய்வங்கள், பெண்தெய்வங்கள், கற்தெய்வங்கள்

7. நாட்டார் ஆண்தெய்வங்களைப் பெயரிடுக
   ॐ ஐயனார், வைரவர், வீரபத்திரர், பெரியதம்பிரான், பூதையார், மதுரைவீரன், குமாரத்தன்

8. நாட்டார் பெண் தெய்வங்களைப் பெயரிடுக?
   ॐ மாரியம்மன், கண்ணகியம்மன், திரௌபதியம்மன், நாச்சிமார்.